பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

05 04 2024 **FRIDAY** 7 15 **PM**

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. மத்திய அரசு கடந்த பத்தாண்டுகளில் சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியுள்ளதாக பிஜேபி கூறியுள்ளது.

2. காங்கிரஸ் ஆளும் மாநிலங்களில் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டுள்ளதாக அக்கட்சி தெரிவித்துள்ளது.

3. உத்தரபிரதேச மாநில கல்வி வாரியத்தின் மதரஸா சட்டம் சட்டவிரோதமானது என்ற அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

4. தமிழ்நாடு, கேரளா உள்ளிட்ட மாநிலங்களில் வரும் 9ஆம் தேதிவரை அனல்காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

5. கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anupama Upadhyaya** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>><<<<>>><<<

நாடுமுழுவதும் மக்களவை தேர்தலுக்கான முதல்கட்ட வாக்குப்பதிவு நடைபெறவுள்ள 102 தொகுதிகளில் அரசியல் கட்சி தலைவர்களின் பிரச்சாரம் தீவிரமடைந்துள்ளது.

வரும் 19ஆம் தேதி இந்த தொகுதிகளில் வாக்குப்பதிவு நடைபெறவுள்ளது.

தமிழகத்தில் உள்ள 39 தொகுதிகளிலும் புதுச்சேரியிலும் வரும் 19ஆம் தேதி நடைபெறவுள்ள வாக்குப்பதிவை முன்னிட்டு கொளுத்தும் வெயிலையும் பொருட்படுத்தாமல், தலைவர்களும், வேட்பாளர்களும் வாக்கு சேகரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

பிஜேபி மூத்த தலைவரும், பிரதமருமான திரு நரேந்திரமோடி இன்று ராஜஸ்தான் மாநிலம் **Churu** உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலும் தீவிரப் பிரச்சாரம் மேற்கொண்டார்.

கடந்த பத்தாண்டுகளில் தமது தலைமையிலான அரசு, சாமானிய மக்களின் அடிப்படைத் தேவைகளை நிறைவேற்றியுள்ளதாக திரு. நரேந்திர மோடி கூறினார்.

இந்நிலையில், புதுதில்லியில் செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் மூத்த தலைவர் திரு. ராகுல் காந்தி, கர்நாடகா, தெலங்கானா, ஹிமாச்சலப்பிரதேச மாநிலங்களில் காங்கிரஸ் ஆட்சி அமைத்ததும் மக்களுக்கான வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டதாக கூறினார்.

இந்நிலையில், மக்களவைக்கு இரண்டாம் கட்டமாக தேர்தல் நடைபெற உள்ள 88 தொகுதிகளில் தாக்கல் செய்யப்பட்ட வேட்புமனுக்கள் மீதான பரிசீலனை இன்று நடைபெற்றது.

12 மாநிலங்கள் மற்றும் யூனியன் பிரதேசங்களுக்கு உட்பட்ட இந்த தொகுதிகளில் வேட்புமனுக்களை விலக்கிக்கொள்ள வரும் எட்டாம் தேதி கடைசி நாளாகும்.

>>><<<<>>><<<

நகர்ப்புற மற்றும் கிராமப்புறப் பகுதிகளில் வாக்குப்பதிவை அதிகரிப்பதற்கு பல்வேறு யுக்திகளை வகுக்க வேண்டும் என்று தேர்தல் அதிகாரிகளை, தலைமைத் தேர்தல் ஆணையர் திரு. ராஜீவ்குமார் கேட்டுக் கொண்டுள்ளார்.

நாடுமுழுவதும் உள்ள மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் குறிப்பிட்ட மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளுடன் இன்று திரு. ராஜீவ்குமார் காணொலி மூலம் மேற்கொண்ட ஆலோசனையில் இந்த அறிவுறுத்தலை வழங்கினார்.

குறைந்த வாக்கு சதவீதம் உள்ள வாக்குச்சாவடிகளை அடையாளம் கண்டு, அங்கு வாக்கு சதவீதத்தை அதிகரிக்க தேவையான நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று அவர் கேட்டுக் கொண்டார்.

இதன்மூலம், வரும் மக்களவைத் தேர்தலில் வாக்காளர்களின் வாக்கு சதவீதத்தை அதிகரிக்க முடியும் என்று அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நாடுமுழுவதும் 215 கிராமப்புற நாடாளுமன்ற தொகுதிகளிலும், 51 நகர்ப்புற நாடாளுமன்ற தொகுதிகளிலும் வாக்கு சதவீதம் குறைவாக இருக்கும் என அடையாளம் காணப்பட்டுள்ளதால், அங்கு வாக்காளர்களுக்கு ஊக்கமளித்து வாக்களிக்க அறிவுறுத்த வேண்டும் என்று திரு. ராஜீவ் குமார் வலியுறுத்தினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில், தில்லி, மும்பை, சென்னை, பெங்களூரு உள்ளிட்ட 12 மாநகராட்சி ஆணையர்கள் மற்றும் பீகார், உத்தரபிரதேச மாநிலங்களிலிருந்து குறிப்பிட்ட மாவட்டங்களின் தேர்தல் அதிகாரிகளும், தமிழ்நாடு, கர்நாடகா உள்ளிட்ட ஏழு மாநிலங்களின் தலைமை தேர்தல் அதிகாரிகளும் பங்கேற்றனர்.

இதனிடையே, தமிழகத்தில் மக்களவைத் தேர்தலில் பணபலம் பயன்படுத்தப்படுவதை தடுப்பதற்கான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேலும் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்கள் இன்றி கொண்டு செல்லப்பட்ட 168 கோடி ரூபாய் மதிப்பிலான பணம் மற்றும் பரிசுப்பொருட்கள் இதுவரை பறிமுதல் செய்யப்பட்டுள்ளன.

உரிய ஆவணங்களை சமர்ப்பிக்கும் பட்சத்தில் அந்த தொகை மற்றும் பொருட்கள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டு வருவதாகவும் தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது.

>>><<<>>><<<

மக்களவைத் தேர்தலில் 100 சதவீத வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் நாடு முழுவதும் தேர்தல் ஆணையம் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடைபெற்று வருகிறது.

இந்த தேர்தலில் அனைவரும் கட்டாயம் வாக்களிக்க வேண்டும் என திருப்பத்தூர் மாவட்டத்தில் முதல் முறையாக வாக்களிக்கவுள்ள கல்லூரி மாணவிகள் வலியுறுத்தியுள்ளனர்.

(சவுண்ட் பைட் - மாணவிகள் 35 செகண்ட்ஸ்)

>>><<<>>><<<

உத்தரபிரதேச மாநில கல்வி வாரியத்தின் மதரஸா சட்டம் சட்டவிரோதமானது என்ற அலகாபாத் உயர்நீதிமன்ற தீர்ப்புக்கு உச்சநீதிமன்றம் தடை விதித்துள்ளது.

உயர்நீதிமன்ற தீர்ப்பை எதிர்த்து தொடரப்பட்ட மேல்முறையீட்டு மனுவை விசாரித்த உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சந்திரசூட் தலைமையிலான மூன்று நீதிபதிகள் கொண்ட அமர்வு, இதுதொடர்பாக மத்திய அரசுக்கும், உத்தரபிரதேச மாநில அரசுக்கும் நோட்டீஸ் வழங்க உத்தரவிட்டது.

>>><<<>>><<<

தமது வழக்கறிஞர்களுடனான ஆலோசனைக் கூட்டங்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டும் என்று கோரி, திஹார் சிறையில் உள்ள தில்லி முதலமைச்சர் திரு. அரவிந்த் கெஜ்ரிவால் தாக்கல் செய்த மனுமீதான தீர்ப்பை சிறப்பு நீதிமன்றம் ஒத்தி வைத்துள்ளது.

வாரத்திற்கு இரண்டு ஆலோசனைக் கூட்டங்கள் என்று இருப்பதை ஐந்தாக அதிகரிக்க வேண்டுமென திரு. கெஜ்ரிவால் மனுதாக்கல் செய்திருந்தார்.

இதன்மீதான தீர்ப்பு வரும் 9ஆம் தேதி வெளியிடப்படும் என்று சிறப்பு நீதிமன்ற நீதிபதி திரு. **Kaveri Baweja** உத்தரவிட்டுள்ளார்.

>>><<<>>><<<

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் கைது செய்யப்பட்டு சிறையில் உள்ள **BRS** கட்சியின் தலைவர் திருமதி. கவிதாவிடம், மத்திய புலனாய்வு அமைப்பான **CBI** விசாரணை நடத்தி, வாக்குமூலம் பதிவு செய்ய தில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

மதுபான கொள்கை முறைகேடு வழக்கில் நிதி மோசடி நடைபெற்றதாக கூறப்படும் புகாரின் அடிப்படையில் திருமதி. கவிதா, கடந்த மாதம் 15ஆம் தேதி கைது செய்யப்பட்டார்.

இதையடுத்து, அவரிடம் விசாரணை நடத்த சிபிஐ அனுமதி கோரிய நிலையில், அதற்கு தற்போது தில்லி நீதிமன்றம் அனுமதி அளித்துள்ளது.

**>>><<<<>>><<<**

சத்திஷ்கர் தலைநகர் **Raipur** அருகேயுள்ள ராம்நகர் பகுதியில் மின்துறை அலுவலக வளாகத்தில் இன்று பயங்கர தீ விபத்து ஏற்பட்டது.

அருகில் உள்ள நிலப்பரப்பிற்கும், தீ பரவியதாகவும், 10க்கும் மேற்பட்ட தீயணைப்பு வாகனங்கள் தீயை அணைக்கும் பணியில் ஈடுபட்டதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

மின்மாற்றியில் ஏற்பட்ட மின்கசிவின் காரணமாக இந்த விபத்து ஏற்பட்டிருக்கலாம் என முதற்கட்ட தகவல்கள் தெரிவிக்கின்றன. அந்தப்பகுதி முழுவதும் கரும்புகை பரவியதால், மக்கள் அவதிக்குள்ளானதாக தெரிகிறது.

**>>><<<<>>><<<**

தைவான் நாட்டில் கடந்த சில தினங்களுக்கு முன்பு ஏற்பட்ட நிலநடுக்கத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10-ஆக அதிகரித்துள்ளது.

ஆயிரக்கணக்கானோர் இடிபாடுகளில் சிக்கி படுகாயம் அடைந்துள்ளனர்.

நிலநடுக்கத்தில் **Hualien** பகுதி முழுவதுமாக பாதிப்படைந்ததாகவும், கட்டிடங்கள் சரிந்து விழுந்ததாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன் காரணமாக, தைவான் நாட்டின் இதர பகுதிகளுடனான தொடர்பு துண்டிக்கப்பட்டது.

மீட்புப் பணிகள் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

**>>><<<<>>><<<**

நாட்டின் கிழக்கு மாநிலங்களிலும், தீபகற்ப பகுதிகளிலும் அடுத்த இரண்டு நாட்களுக்கு அனல் காற்று வீசக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

ஒடிசா, மேற்குவங்கம், ஜார்க்கண்ட், மகாராஷ்ட்ரா, தெலங்கானா மாநிலங்கள் மற்றும் புதுச்சேரியில் தொடர்ந்து வெப்பத்தின் தாக்கம் அதிகரிக்கும் என்று வானிலை மைய அறிக்கை தெரிவிக்கிறது.

தவிர, கடலோர கர்நாடகப் பகுதிகளிலும் கோவாவிலும், நாளையும், கேரளா, தமிழ்நாடு ஆகிய மாநிலங்களில் வரும் 9ஆம் தேதிவரை அனல்காற்று தொடர்ந்து வீசக்கூடும் என்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

என்றாலும், வடகிழக்கு இந்தியப் பகுதிகளில் இந்த காலகட்டத்தில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மைய அறிக்கை தெரிவிக்கிறது.

>>><<<<>>><<<

நடப்பாண்டில் மாலத்தீவுக்கு அத்தியாவசிய பொருட்களின் ஏற்றுமதியை அதிகரிக்க மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. மாலத்தீவு அரசு விடுத்த வேண்டுகோளின் அடிப்படையில் குறிப்பிட்ட அத்தியாவசிய பொருட்களின் ஏற்றுமதி அளவு அதிகரிக்கப்பட்டுள்ளதாக அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்துள்ளது.

>>><<<<>>><<<

கஜகஸ்தான் சர்வதேச சேலஞ்சர் பேட்மிண்டன் போட்டியில், இந்தியாவின் **Anupama Upadhyaya** அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

இன்று நடைபெற்ற மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 21-23, 27-25, 21-18 என்ற செட் கணக்கில், இந்தியாவின் **Devika Sihag** –ஐ வென்றார்.

மற்றொரு மகளிர் ஒற்றையர் பிரிவு காலிறுதி ஆட்டத்தில், **Isharani Baruah 11-21, 21-16, 21-14** என்ற செட் கணக்கில் **Tanya Hemanth** –ஐ வென்று அரையிறுதிக்கு தகுதி பெற்றார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவில் பரத் ராகவ்-வும், **Tharun Mannepalli** –யும் காலிறுதி ஆட்டங்களில் வெற்றிபெற்று, அரையிறுதிக்கு முன்னேறினர்.

>>><<<<>>><<<

ஜெர்மன் ஓபன் ஸ்குவாஷ் போட்டியில் இந்தியாவின் வேலவன் செந்தில்குமார் காலிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

>>><<<<>>><<<

ஐபிஎல் கிரிக்கெட் போட்டியில் சென்னை அணிக்கு எதிராக டாஸ் வென்ற ஹைதராபாத் அணி முதலில் பந்துவீச தீர்மானித்துள்ளது. ஹைதராபாதில் இப்போட்டி இன்னும் சற்றுநேரத்தில் தொடங்கவுள்ளது.

>>><<<<END>>><<<